சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

SC.229/2017

இந்நீதிமன்றத்தின் எழுத்தர் திருமதி.D.ரேவதி, Grade-II Bench Clerk, என்பவரால் முறையோடு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் 1ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு 2019ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். அழகப்பன் (PW5) | நாள்: 15.10.2019 |
| த/பெ. | தொழில் |
| வயது. | |
| கிராமம். | வட்டம் |

**வா.சா.1 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் தென்னம்பட்டில் குடியிருந்து வருகின்றேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். 2016ம் வருடம் ஒரு நாள் தேதியும் மாதமும் ஞாபகம் இல்லை. காலை 8.00 மணியளவில் நான் அ.சா.4 ன் நடராஜனின் கழனியில் பரம்பு ஓட்டிக்கொண்டிருந்தபோது அ.சா.4 ன் நடராஜன் பக்கத்து கழனியில் இருந்து மாட்டை ஓட்டிக்கொண்டி கால்வாய் வழியாக வந்து கொண்டிருந்த போது நடராஜன் மற்றும் ஆஜர் எதிரியான நீலகிருஷ்ணனுக்கும் தகராறு நடந்தது. அந்த சமயத்தில் அ.சா.4 நடராஜனின் மகன்கள் சம்பவத்தை பார்த்து விட்டு ஓடினார்கள் அ.சா.4 நடராஜனின் மகன் பெயர் செந்தில் மற்றொரு மகனின் பெயர் ஞாபகம் இல்லை. அவர்கள் அடித்துக்கொண்டதில் அ.சா.4 நடராஜனுக்கு இரத்தம் வந்தது. எப்படி அடித்துக்கொண்டார்கள் என்பதை நான் பார்க்கவில்லை அ.சா.4 நடராஜன் இரத்தம் ஒழுக வந்தவரை ஆட்டோ ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். இந்த சம்பவத்தில் அ.சா.4 நடராஜனின் மகன்கள் இருவருக்கும் காயம் ஏற்பட்டது. அ.சா.4ன் மகன் செந்திலுக்கு நெற்றியில் காயம் பட்டதாக நெற்றி பகுதியை தொட்டு காண்பிக்கிறார். மற்றொரு மகனுக்கு காலில் அடிபட்டது இடது காலா அல்லது வலது காலா என்று எனக்கு தெரியவில்லை. இச்சம்வத்தினை

நிறைய நபர்கள் பார்ததார்கள் ஆனால் எனக்கு  யார் என்று ஞாபகம் இல்லை .  என்னை போலிசார் விசாரித்தார்கள்-

கு.வி- இல்லை

வழக்கறிஞர் ஆஜர்.

சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

SC.229/2017

இந்நீதிமன்றத்தின் எழுத்தர் திருமதி.D.ரேவதி, Grade-II Bench Clerk, என்பவரால் முறையோடு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் 1ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு 2019ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். செந்தில்குமார் (PW6) | நாள்: 15.10.2019 |
| த/பெ. | தொழில் |
| வயது. | |
| கிராமம். | வட்டம் |

**<u>வா.சா.1 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

நான் புலியரங்கன் கோட்டையில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் அ.சா.1என்னுடைய அண்ணன், அ.சா.4 என்னுடைய தந்தை. கடந்த 24.04.2016 தேதி காலை சுமார் 8.00 மணியளவில் நடவு நடுவதற்காக எங்கள் கழனியை உழவு செய்துகொண்டிருந்தோம். அ.சா.5 அழகப்பன் பரம்பு ஓட்டிக்கொண்டிருந்தார் ஒருமாடு போதவில்லை என்பதால் என் தந்தை அ.சா.4 சுரேஷ் என்பவரின் மாட்டை அவருடைய கழனியில் இருந்து ஏரிக்கால்வாய் வழியாக வந்தார். எங்கள் கழனிக்கு வரவேண்டுமென்றால் எதிரி கழனிப்பகுதியை ஒட்டியுள்ள கால்வாயை தாண்டிதான் வரவேண்டும். அந்த சமயத்தில் 2 மற்றும் 3வது எதிரிகள் மற்றும் 1வது எதிரியின் மனைவி வேர்க்கடலை எடுத்துக்கொண்டிருந்தார்கள். 1வது எதிரியும் வேலை செய்து கொண்டிருந்தார். என் அப்பாவை பார்த்து 2 மற்றும் 3வது எதிரிகள் எங்கள் கழனி வழியாக ஏன் வருகிறீர் என்று சொல்லி ஏன்டா தெவிடியா பையா என் கழனி வழியாக வருகிறாய் என்றும் பொறம்போக்கு பையா என்றும் நிறைய தவறான வார்த்தைகளை 2 மற்றும் 3வது எதிரிகள் என் தந்தையை பார்த்து திட்டினார்கள். என்னால் அந்த தரக்குறைவான வார்த்தைகளை இந்த இடத்தில் சொல்ல முடியவில்லை. நாங்கள் அதை பார்த்து விட்டு ஏதோ பேசிக்கொண்டுதான் இருக்கின்றார்கள்

என்று சொல்லி எங்களுடைய வேலையை பார்த்துக்கொண்டிருந்தோம். திடீரென்று 2வது எதிரி சதீஷ் இரும்பு பழுப்பை எடுத்து என் தந்தையின் வலது கண்ணம் மற்றும் கை, கால்களில் அடித்தார். என் அப்பா கத்தினார். 3வது எதிரி சத்தியால் என்அப்பாவின் கை, கால், உடம்பிலும் அடித்தார். ஒரு மரக்கட்டையை எடுத்து என் தந்தையில் முதுகில் அடித்தார். என் அப்பாவை அடித்ததை பார்த்து நானும் என் அண்ணனும் ஓடினோம். நாங்கள் சென்று என் அப்பாவை தூக்க முயற்சித்த போது 2வது எதிரி என்னை இரும்பு பழுப்பால் இடது கண்ணத்தில் கண்ணுக்கு கீழ் பகுதியில் அடித்து எலும்பு முறிவை ஏற்படுத்தினார் . மேலும் அதே இரும்பு பழுப்பால் 2வது எதிரி என்னை தலையில், உச்சியில் வலது பகுதியில் அடித்தார். என்னை 3வது எதிரி தனசேகர் சத்தியால் இடது கையில் அடித்தார். என் அண்ணனை 1 முதல் 3 எதிரிகள் இரும்பு பழுப்பு, சத்தி மற்றும் கட்டையால் அடித்தார். 1வது எதிரி என் அண்ணனை கட்டையால் காலில் அடித்தார் எந்த கால் என்று சரியாக தெரியவில்லை. 2வது எதிரி என் அண்ணனை வலது புருவத்தில் இரும்பு பழுப்பால் அடித்தார். 3வது எதிரி என் அண்ணனை மண்டையில் வலது பக்கத்தில் அடித்தார் . சாட்சி மிண்டும் தன் அண்ணனின் மண்டையில் இடது பக்கம் அடித்ததாகக் கூறினார். நாங்கள் மூவரும் கீழே விழுந்து விட்டோம். எங்களை அடிக்கும்போது இதோடு ஒழிந்து போங்கள் என்றும் உங்களை விடமாட்டோம் என்று சொல்லி சொல்லி அடித்தார்கள். மற்றவர்கள் வந்ததை பார்த்ததும் எதிரிகள் ஓடிவிட்டார்கள். பக்கத்தில் இருந்த செல்லம்மாள் மற்றும் அழகப்பன் ஆகியோரும் ஓடிவந்து எங்களுக்கு வந்த இரத்தத்தை துடைத்து விட்டார்கள். நாங்கள் 108க்கு போன் செய்தோம் ஆனால் கிடைக்கவில்லை. பக்கத்து வீட்டில் விருந்தாளியாக வந்திருந்த ஆட்டோவினை எடுத்துக்கொண்டு சித்தாமூர் காவல் நிலையம் சென்றோம். முதலில் மருத்துவமனை செல்லுங்கள் அதன் பிறகு புகார் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். மதுராந்தகம் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்து விட்டு காயம் அதிகமாக இருந்ததால் செங்கல்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

(குறுக்கு விசாரணை இல்லை)

வழக்கறிஞர் ஆஜர்.